இந்திய உச்ச நீதிமன்றம்

தீர்ப்பு நாள் : 2019 ம் ஆண்டு பிப்ரவரி 27 ம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் செல்வி.ஆர்.பானுமதி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு..ஆர்.சுபாஷ் ரெட்டி

குற்றவியல் மேல்முறையீடு எண் : 395/2019

சுனில் குமார் குப்தா மற்றும் பலர்.....மேல்முறையீட்டாளர்

//எதிராக//

உத்தர பிரதேச மாநிலம் மற்றும் பலர் ... எதிர் மேல்முறையீட்டாளர்

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973: பி.319 - இ.த.ச. பிரிவு 302-வின் கீழான குற்றத்திற்கு மேல்முறையீட்டாளர்களை அழைத்தல் - பலியானவர் வரதட்சணைக் கொடுமையால் இறந்ததாகக் குற்றச்சாட்டு - அரசின் வழக்கு யாதெனில் பாதிக்கப்பட்டவர்-பலியானவரின் மரண வாக்குமூலம் என்னவென்றால், அவரது கணவர் மற்றும் சம்பந்தி ஆகியோர் தன்னிடம் வரதட்சணையை வற்புறுத்திக் கேட்டு அதன் காரணமாகத் தான் நெருப்பிடப் பட்டதாகக் கூறினார் - விசாரணையின் போது, பி.302-ன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்கு மேல்முறையீட்டாளர்கள்/குற்றஞ்சாட்டப்பட்டவர்களை, அவர்களது பெயர்கள் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாலும் மற்றும் அ.ச-1 மற்றும் அ.ச-3 ஆகியோரின் வாக்குமூலத்திலும் உள்ளதாலும், அவர்களை வரவழைக்க வேண்டி பி.319-ன் கீழ், அரசால் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது - மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக முகாந்திர சாட்சியம் உள்ளதாகக் கூறி விண்ணப்பத்தை விசாரணை நீதிமன்றம் அனுமதித்தது - விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவிற்கு எதிரான சீராய்வு மனுவினை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது- மேல்முறையீட்டில் பேரில்,

முடிவு: இதச-வின் பி.302-ன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்களை அழைத்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்காக எந்தவொரு வழக்கு முகாந்திரமும் இல்லை என்று முடிவு - மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக முகாந்திர சாட்சியம் உள்ளதாகக் கூறி விண்ணப்பத்தை விசாரணை நீதிமன்றம் அனுமதித்தது - மரண வாக்குமூலத்தில், இறந்தவர் அவரது நாத்தனார் பெயரை மட்டுமே குறிப்பிட்டுள்ளார், மற்றவர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை - இதச வின் பி.302-ன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காகக் குற்ற அறிக்கைக் கூட அவரது நாத்தனாரின் பெயரிலேயே தாக்கல் செய்யப்பட்டது - பி.319-ன் கீழ் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை விடுப்பதற்கு, அவரும் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் எனும் வெறும் நிகழ்தகவின் பேரில் அல்லாமல் ஒரு வலுவான சாட்சியம் தேவைப்படுகிறது, ஆனால் அது தற்போதைய வழக்கில் இல்லை - நிகழ்விற்கு அடுத்த நாள் காவல் நிலையத்தில், இறந்தவரின் தந்தையான அ.ச-1, மேல்முறையீட்டாளர்களின் பெயர்களைக் கூறவில்லை அல்லது வெளிப்படையாக அவர்கள் எந்தவொரு செயலையும் செய்ததாகவோ கூறவில்லை. அதே போல, நீதிமன்றத்தின் முன்பான தங்களது சாட்சியத்தில் கூட, அ.ச-1 மற்றும் 3, இறந்தவர் தமது நாத்தனார் மற்றுமுள்ள அனைவரும் தன் மீது நெருப்பூட்டியதாகக் கூறினார் என்றே தெரிவித்தனர்- புகாரோ அல்லது சாட்சிகளின் சாட்சியங்களோ, நிகழ்ந்த குற்றத்தில் மேல்முறையீட்டாளர்களின் பாத்திரம் என்ன என்றோ மற்றும் எந்த குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ன குற்றம் செய்தார் என்பதைப் பற்றியோ குறிப்பிடவில்லை - புகாரிலுள்ள உறுதிக்கூற்றுகள் மற்றும் வரதட்சணைக் குறித்த வற்புறுத்தல் தொடர்பான சாட்சியம் தெளிவற்றதாக இருந்தது மற்றும் எந்தவொரு மேல்முறையீட்டாளரின் எந்தவொரு குறிப்பிட்ட கோரிக்கையும் சொல்லப்படவில்லை - இந்த சூழ்நிலைகளில், இதச -வின் பி.498 ஏ, பி.302 மற்றும் வரதட்சணை தடை சட்டத்தின் துணைப்பிரிவுகள் 3 மற்றும் 4-ன் கீழான குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை விடுப்பதில் எந்தவொரு நியாயமுமில்லை - எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படவேண்டியதாகும்- தண்டனைச் சட்டம்,1860 - துணைப்பிரிவுகள் 498 ஏ மற்றும் 302 -

வரதட்சணை தடை சட்டம்- துணைப்பிரிவுகள் 3 மற்றும் 4.

குற்றவியல் நடைமுறைச் சட்டம்,1973: பி.319- பி.319-ன் கீழ் நீதிமன்றத்தின் அதிகாரம், நோக்கெல்லை - முடிவு: பி.319(1)வானது, குற்றஞ்சாட்டப்பட்டவர் என்று குறிப்பிடப்படாத எந்தவொரு நபருக்கும் எதிராக நடவடிக்கை தொடர நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்குகிறது, அவ்வாறு நடவடிக்கையைத் தொடர, சாட்சியத்தில் அந்த நபரானவர் ஏதேனும் குற்றம் புரிந்ததற்காக அவரைக் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்று தோன்றவேண்டும் - பி.319-ன் கீழான அதிகாரம், தன்னிச்சையான ஒன்று மற்றும் சிறப்பு அதிகாரம் மற்றும் அதனை குறைவாக மட்டுமே பயன்படுத்த வேண்டும் மற்றும் வழக்கின் சூழ்நிலைகளுக்குட்பட்டு, நீதிமன்றத்தின் முன்பான சாட்சியத்தில் ஒரு நபருக்கு எதிராக வலுவான மற்றும் நம்பத்தக்க சாட்சியம் இருந்தால் மட்டுமே, அத்தகைய அதிகாரத்தை செலுத்த முடியும் மற்றும் தற்செயலாகவோ, அக்கறையில்லாமலோ அதனைப் பயன்படுத்தக்கூடாது.

மேல்முறையீடுகளை அனுமதித்து, நீதிமன்றத்தின்

முடிவு : 1.1 கு.ந.ச-பிரிவு 319-னைப் பொறுத்து நீதிமன்றம் தனது அதிகாரவரம்பைப் பயன்படுத்துவதற்கு முன்னதாக, அரசு தரப்பிலான சாட்சியம், எதிர்த்துரைக்கப்படவில்லையெனில், அதுவே வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவராகச் சேர்க்கப்படவேண்டும் என்று கூறப்படும் நபர்களின் குற்றத்தை நிரூபிக்கும் என்று மனநிறைவினை அடையவேண்டும் என்பது நன்கு முடிவு செய்யப்பட்ட ஒன்றாகும்.

1.2 ஹர்தீப் சிங் வழக்கில், குற்றவியல் சட்டப் பிரிவு 319 ன் கீழ் உள்ள அதிகாரம் ஒரு தன்னிச்சையான மற்றும் சிறப்பு அதிகாரம் என்றும், வழக்கின் சூழ்நிலைகள் அவ்வாறு உத்தரவாதம் அளிக்கும் சந்தர்ப்பங்களில் மட்டுமே மிதமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்ட சாட்சியங்களில் இருந்து ஒரு நபருக்கு எதிராக வலுவான

மற்றும் உறுதியான சான்றுகள் ஏற்பட்டால் மட்டுமே, அத்தகைய அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், சாதாரண மற்றும் அக்கறையற்ற முறையில் அல்ல என்றும் கூறப்பட்டது. இந்த கோட்பாட்டை இந்த வழக்கில் பயன்படுத்துகையில், மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை விடுப்பதற்கும் மற்றும் இதச -வின் பிரிவு 302 இன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் எந்தவொரு முகாந்திர வழக்கும் உருவாக்கப்படவில்லை. இறந்துபோனவரின் மரண வாக்குமூலத்தில், இறந்தவரின் நாத்தனார் பெயரை மட்டுமே குறிப்பிட்டுள்ளார்; ஆனால் மற்றவர்களின் பெயர்களை அவர் குறிப்பிடவில்லை.அடுத்த நாள் போலீசில் தாக்கல் செய்த புகாரில், தனது மகள் அவரது நாத்தனார் மற்றும் மற்ற அனைவரும் மண்ணெண்ணெய் ஊற்றிய பின்னர் அவளைத் தீயிட்டுக் கொன்றதாகத் தனக்குக் கூறியதாக அ.ச-1 கூறியிருந்தார். அ.ச-1, மேல்முறையீட்டாளர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை அல்லது எந்த வெளிப்படையான செயலையும் அவர்கள் செய்ததாகக் கூறவில்லை. அதேபோல், நீதிமன்றத்தின் முன் தங்கள் சாட்சியத்தில், அ.ச - 1 மற்றும் 3, இறந்தவரின் நாத்தனார் மற்றும் அனைவரும் இறந்தவரின் மீது தீ வைத்ததாக இறந்தவர் கூறியதாகக் கூறினர். குற்றம் செய்ததில் மேல்முறையீட்டாளர்கள் வகித்த பங்கையும், எந்த குற்றவாளி எந்த குற்றத்தை செய்தார் என்பதையும் புகார் அல்லது சாட்சிகளின் சாட்சியங்கள் குறிக்கவில்லை.இவ்வாறான சூழ்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது இதச -வின் பிரிவு 302 ன் கீழ் தண்டனை விதிக்கப்படும் குற்றத்திற்காகக் குற்றம் சாட்டப்பட்டவர் மீது விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு அரசு தரப்பில் முகாந்திரம் இருப்பதாகக் கூற முடியாது.

ஹர்தீப் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் மற்றும் பிறர் (2014) 3 எஸ்.சி.சி. 92 :

[2014] 2 எஸ்.சி.ஆர்.1; சரப்ஜித் சிங் மற்றும் மற்றொருவர் எதிர்

பஞ்சாப் மாநிலம் மற்றும் மற்றொருவர் (2009) 16 எஸ்.சி.சி.46;[2009]

8 எஸ்.சி.ஆர் 762 – சார்வுறப்பட்டது.

21 கு.ந.ச பிரிவு 319-ன் கீழான வகையங்களைப் பயன்படுத்தி, குற்றம் சாட்டப்பட்டவர் எந்தக்

குற்றத்திற்காகக் குற்றம் சட்டப்பட்டாரோ அதே குற்றத்திற்காக மட்டுமல்லாமல், "எந்த குற்றத்திற்காகவும்" ஒரு நபரை குற்றவாளியாக சேர்க்கலாம்; ஆனால் அந்தக் குற்றத்திற்காக அனைத்து குற்றம் சாட்டப்பட்டவர்களையும் சேர்த்து விசாரணை செய்வதாக இருக்க வேண்டும். இ.த.ச -வின் பிரிவு 498 ஏ மற்றும் வரதட்சணை தடைச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 -ன் கீழான குற்றதிற்காக மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை விடுக்கலாமா என்பதைக் காண வேண்டும். புகார் மற்றும் நீதிமன்றத்தில் அவர் அளித்த சாட்சியம் ஆகிய இரண்டிலும் அ.ச.-1 அளித்த வாக்குமூலம் மிகப் பொதுப்படையாக உள்ளது, அதில் அவர், அவரது நிலையைப் பொறுத்து போதுமான வரதட்சணை வழங்கியதாகவும் ஆனால் மணமகன் பக்கம் அந்த வரதட்சணையைக் கொண்டு திருப்தியடையாமல், ஒவ்வொரு முறையும் வரதட்சணையைக் கோருவார்கள் என்று கூறுகிறார்.வரதட்சணை கோருதல் மற்றும் வரதட்சணை கொடுமைப்படுத்துதல் தொடர்பாக, இந்த கோரிக்கையின் நேரம் மற்றும் அதன் தன்மை குறித்து எந்த விவரமும் அளிக்கப்படவில்லை. புகார் மற்றும் சாட்சியங்களில் உள்ள கூற்றுகள் தெளிவற்றவை மற்றும் எந்தவொரு மேல்முறையீட்டாளரின் எந்தவொரு குறிப்பிட்ட கோரிக்கையும் இல்லை. இத்தகைய சூழ்நிலையில், இதச -வின் பிரிவு 498 ஏ மற்றும் வரதட்சணை தடை சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் கீழ் கூட, மேல்முறையீட்டாளர்களை அழைப்பதற்கு எந்த நியாயமும் இல்லை.

2.2 விசாரணை முடிந்ததும், இ.த.ச-வின் பிரிவுகள் 498 ஏ, 304-பி மற்றும் வரதட்சணை தடை சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் கீழ் எந்த குற்றமும் செய்யப்படவில்லை என்று விசாரணை அதிகாரி கருதினார். இறந்தவரின் நாத்தனாருக்கு எதிராக இதச-வின் பிரிவு 302-வின் கீழான குற்றத்திற்காக மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஹர்தீப் சிங் வழக்கில் அரசமர்வு வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்டுள்ளபடி, குநச-வின் பிரிவு 319-ன் கீழ் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை விடுப்பதற்கு, அவரும் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் எனும் வெறும் நிகழ்தகவின் பேரில் அல்லாமல் ஒரு வலுவான சாட்சியம்

தேவைப்படுகிறது, ஆனால் அது தற்போதைய வழக்கில் இல்லை. விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் இந்த விவகாரத்தை நன்கு தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் பரிசீலிக்கவில்லை, மேலும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படவேண்டியது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2014] 2 எஸ்.சி.ஆர்.1-ல் உள்ள பத்தி 5 சார்வுறப்பட்டது

[2009] 8 எஸ்.சி.ஆர். 762-ல் உள்ள பத்தி 10 சார்வுறப்பட்டது

குற்றவியல் மேல்முறையீடு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண் 395/2019

குற்றவியல் மேல்முறையீடு எண் 396/2019 உடன் குற்றவியல் சீராய்வு எண் 1354/2017-ல் உள்ள அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் 25.04.2017 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுந்துள்ளது.

பசவ பிரபு எஸ். பாட்டில், மூத்த வழக்கறிஞர் ஆர். சந்திரசூட், ஏ. ரமேஷ், சையத் அகமது நக்வி, செல்வி. அருணா குப்தா, பிரியன்ஷு மகேஸ்வரி, பி.ரமணா மூர்த்தி, மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்கறிஞர்கள்.

செல்வி. ருச்சி கோலி, அஜய் விக்ரம் சிங், பூர்ணெண்டு பாஜ்பாய், செல்வி.பிரியங்கா சிங், செல்வி.கமலேஷ் ஆனந்த், செல்வி. நிதி ஜஸ்வால், செல்வி.ஸ்ரீஷ்டி மிஸ்ரா, பிருத்வி பால், ரோஹித் சிங் ஆகியோர் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்கறிஞர்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் செல்வி. **ஆர்.பானுமதி** அவர்களால் வழங்கப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இதச-வின் பிரிவு 302 ன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காக குநச-தின் பிரிவு 319-ன் கீழ் மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணையை விடுத்த விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை, 25.04.2017 அன்று குற்றவியல் சீராய்வு எண் 1354/2017 -ல் உறுதிப்படுத்திய உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து இந்த மேல்முறையீடுகள் எழுகின்றன.

3. சுதிர் குமார் குப்தாவின் (அ.ச -1) மகளான மறைந்த ஷில்பாவின் திருமணம் டிம்பல் என்கிற ஆகாஷ் தீப் உடன் 26.01.2006 அன்று நடந்தது. திருமணத்தின் மூலம் இரண்டு குழந்தைகள் பிறந்தனர். புகார்தாரரின் - சுதிர் குமார் குப்தா (அ.ச -1) கூற்றுப்படி, அவரது மகள் ஷில்பா, அவரது கணவர் டிம்பல் என்கிற ஆகாஷ் தீப் மற்றும் மேல்முறையீட்டாளர்களான - அவரது கணவரின் குடும்பத்தினர் அவரிடம் வரதட்சணையைக் கோருவதாகப் புகார் அளித்துள்ளார். புகார்தாரர்-(அ.ச -1) கூறியதாவது, 19.08.2012 அன்று, அவரது மகள் ஷில்பா தீயிடப்பட்டார் மற்றும் அவர் முழு விழிப்புணர்வுடன் தன்னிடம் கூறியது யாதெனில், சஞ்சல் என்கிற பபிதா, சச்சின், சுனில் குமார் குப்தா (டிம்பலின் மூத்த மாமா), புஷ்பா (சுனில் குமார் குப்தாவின் மனைவி), விக்கி (சுனில் குமார் குப்தாவின் மகன்), நீரு, ஸ்ரீகாந்த் குப்தா (சுனில் குமார் குப்தாவின் சகோதரர்), பகவான் மற்றும் குஷ்பு குப்தா ஆகியோர் அவர் மேல் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்தனர் என்பதாகும். ஷில்பாவின் மரண வாக்குமூலம் 19.08.2012 அன்று இரவு 9.40 மணியளவில் தாசில்தாரால் பதிவு செய்யப்பட்டது, அதில், அவர் மீது சஞ்சல் என்கிற பபிதா மண்ணெண்ணெய் ஊற்றி, தீயிட்டார் என்று கூறினார். அதே நாள் இரவன்று, அதாவது 19.08.2012 அன்று, ஷில்பா காயங்களால் இறந்தார். சுதிர் குமார் குப்தா (அ.சா-1), அளித்த புகாரின் பேரில், இதச -வின் பிரிவுகள் 304-பி, 498 ஏ, 302 மற்றும் வரதட்சணை தடை சட்டம், 1961-வின் பிரிவுகள் 3 மற்றும் 4-ன் கீழ், மேல்முறையீட்டாளர்கள் உட்பட ஒன்பது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக முவிஅ பதிவு செய்யப்பட்டது. விசாரணை முடிந்ததும், சஞ்சல் என்கிற பபிதா (சச்சினின் மனைவி) மீது இதச-வின் பிரிவு 302 ன் கீழ் தண்டிக்கப்படும் குற்றத்திற்காக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பொறுத்தவரை, இதச-வின் பிரிவுகள் 498 ஏ, 304-பி மற்றும் வரதட்சணை தடை சட்டம், 1961-வின்

பிரிவுகள் 3 மற்றும் 4-ன் கீழான எந்த குற்றமும் இல்லை என்று குற்ற அறிக்கை கூறியது.

4. இந்த விசாரணையில், சுதிர் குமார் குப்தா (அ.ச.-1), மோஹித் அகர்வால் (அ.ச.- 2), மற்றும் முனிஷ் குப்தா (அ.ச.-3) ஆகியோர் 30.10.2014, 06.11.2015 மற்றும் 08.11.2015 அன்று பரிசோதிக்கப்பட்டனர். சுமார் ஒரு வருடம் கழித்து, 04.10.2016 அன்று, வழக்கு விசாரணையின் போது, கு.ந.ச-தின் பிரிவு 319-ன் கீழ் அரசு தரப்பில், ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதில், மேல்முறையீட்டாளர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள், முவிஅ மற்றும் அ.ச.-1 மற்றும் அ.ச.-3 ஆகியோரின் சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டதால், இதச -வின் பிரிவு 302 கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காக, அவர்களை அழைக்குமாறு கோரப்பட்டது. விசாரணை நீதிமன்றம், இதச -வின் பிரிவு 302-ன் கீழ் தண்டிக்கப்படும் குற்றத்திற்காக அவர்களை விசாரணை செய்வதற்கு முகாந்திர சாட்சியம் உள்ளதாக முடிவு செய்து, அந்த விண்ணப்பத்தினை அனுமதித்து, இதச -வின் பிரிவு 302-ன் கீழ் விசாரிப்பதற்காக, மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை விடுக்குமாறு உத்தரவு இட்டது. மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த மறுஆய்வு மனுவில், மறுஆய்வுக் குழுவினருக்கு எதிராக குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருப்பதாகவும், எனவே, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில் சட்டவிரோதத்தையோ அல்லது முறையற்ற தன்மையையோ காணவில்லை என்றும் கூறி, தனது எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் உயர்நீதிமன்றம் மறுஆய்வு மனுவை தள்ளுபடி செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் நம்முன் உள்ளனர்.

5. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான திரு. பசவ பிரபு எஸ்.பாட்டில், கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் வாதிட்டதாவது, மேல்முறையீட்டாளர்களின் பெயர்கள் முவிஅ -ல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர், குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, விசாரணை அதிகாரி மூலம் அவர்கள் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர், ஆனால்

உயர்நீதிமன்றத்தில் இந்த கோணத்தில் பரிசீலிக்கப்படவில்லை. ஹர்தீப் சிங் எதிர் பஞ்சாப் மாநில அரசு மற்றும் பலர் (2014) 3 எஸ்.சி.சி. 92 என்ற வழக்கில் அரசமர்வின் தீர்ப்புரையைச் சார்ந்து, முன்வைக்கப்பட்டது யாதெனில், கு.ந.ச -தின் பிரிவு 319 -ன் கீழ் அதிகாரத்தை மிதமாகப் பயன்படுத்த வேண்டும் மற்றும் வழக்கின் சூழ்நிலைகள் அவ்வாறு உத்தரவாதம் அளிக்கும் போது மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவர், கு.ந.ச -தின் பிரிவு 319 -ன் அழைக்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த வழக்கில், இதச -வின் பிரிவு 302-ன் கீழ் மேல்முறையீட்டாளர்களை விசாரணைக்கு அழைப்பதற்கு கு.ந.ச-வின் பிரிவு 319 -ன் கீழ் தனது அதிகார வரம்பைப் பயன்படுத்த விசாரணை நீதிமன்றத்திற்கு வலுவான மற்றும் உறுதியான சாட்சியங்கள் இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது. இறந்த ஷில்பாவின் மரண வாக்குமூலத்தில், சஞ்சல் என்கிற பபிதாவின் பெயர் மட்டுமே இருந்தபோது, விசாரணை நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் இதச -வின் பிரிவு 302 ன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்களை அழைப்பதற்கு உத்தரவு தந்திருக்கக் கூடாது என்று வாதிடப்பட்டது.

6. மாறாக, மேல்முறையீட்டாளர் - அரசு சார்பாக முன்னிலையான செல்வி. ருச்சி கோலி, கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டது யாதெனில், அ.ச.-1 மற்றும் அ.ச.-3 ஆகியோரின் சாட்சியங்களின் மூலம், மேல்முறையீட்டாளர்கள், குற்றத்தில் பங்குகொண்டதற்கான முகந்திர சாட்சியம் பதிவில் இருப்பதாக விசாரணை நீதிமன்றம் திருப்தியடைந்தது மற்றும் உயர் நீதிமன்றமும், குற்றம் சாட்டப்பட்டவரை அழைத்து வர உத்தரவு பிறப்பித்த விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிட மறுத்தது சரியானதே ஆகும் என்று கூறினார்.

7. நாங்கள், முன்வைக்கப்பட்ட சமர்ப்பிப்புகளையும், எதிர்ப்புக்குள்ளான உத்தரவையும் மற்றும் பதிவிலுள்ள மற்ற பொருட்களையும் கவனமாகப் பரிசீலித்தோம்.

8. 19.08.2012 அன்று, இரவு 09.40 மணிக்கு நடந்த சம்பவத்திற்குப் பிறகு உடனடியாக, தாசில்தாரால் பதிவு செய்யப்பட்ட தனது மரண வாக்குமூலத்தில், இறந்த ஷில்பா, "தனது நாத்தனார் (தேவ்ராணி) சஞ்சல் என்ற பபிதாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும்.....மற்றும் சஞ்சல் என்ற பபிதா, தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி, பற்ற வைத்ததாகவும்" கூறினார். அடுத்த நாள்,அதாவது 20.08.2012 அன்று அ.ச.-1 அளித்த புகாரில், மேல்முறையீட்டாளர்களின் பெயர்களை அவர் குறிப்பிட்டுள்ளார். இதச-வின் பிரிவு 302-ன் கீழ் குற்ற அறிக்கை சஞ்சல் என்ற பபிதாவுக்கு எதிராக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டபோது, புகார்தாரர் அந்த கட்டத்தில் எந்த எதிர்ப்பு மனுவையும் தாக்கல் செய்யவில்லை. தனது சாட்சியத்தில், அ.ச.-1 மேல்முறையீட்டாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவரது மகள் ஷில்பா, சஞ்சல் என்ற பபிதா உட்பட அனைத்து மேல்முறையீட்டாளர்களின் பெயர்களையும் அவருக்கு விழிப்புணர்வுநிலையில் கூறியதாகவும் மற்றும் தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததற்கு அவர்கள் பொறுப்பு என்றும் கூறியுள்ளார்.

9. பி.319(1)வானது, குற்றஞ்சாட்டப்பட்டவர் என்று குறிப்பிடப்படாத எந்தவொரு நபருக்கும் எதிராக நடவடிக்கை தொடர நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்குகிறது, அவ்வாறு நடவடிக்கையைத் தொடர, சாட்சியத்தில் அந்த நபரானவர் ஏதேனும் குற்றம் புரிந்ததற்காக அவரைக் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்று தோன்றவேண்டும். கு.ந.ச-பிரிவு 319-னைப் பொறுத்து நீதிமன்றம் தனது அதிகாரவரம்பைப் பயன்படுத்துவதற்கு முன்னதாக, அரசு தரப்பிலான சாட்சியம், எதிர்த்துரைக்கப்படவில்லையெனில், அதுவே வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவராகச் சேர்க்கப்படவேண்டும் என்று கூறப்படும் நபர்களின் குற்றத்தை நிரூபிக்கும் என்று மனநிறைவினை அடையவேண்டும் என்பது நன்கு முடிவு செய்யப்பட்ட ஒன்றாகும். ஹர்தீப் சிங் வழக்கில், அரசமர்வு பின்வருமாறு கூறியது :-

"105. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 319 ன் கீழ் உள்ள அதிகாரம், ஒரு

தன்னிச்சையான மற்றும் சிறப்பு அதிகாரம். வழக்கின் சூழ்நிலைகள் அவ்வாறு உத்தரவாதம் அளிக்கும் சந்தர்ப்பங்களில் மட்டுமே மிதமான முறையில் அது பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு குற்றத்தினை வேறு சில நபர்களும் புரிந்திருக்கக்கூடும் என்ற குற்றவியல் நடுவர் அல்லது அமர்வு நீதிபதியின் கருத்தினைக் கொண்டு மட்டும் அது பயன்படுத்தப் படக்கூடாது. நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்ட சாட்சியங்களில் இருந்து ஒரு நபருக்கு எதிராக வலுவான மற்றும் உறுதியான சான்றுகள் ஏற்பட்டால் மட்டுமே, அத்தகைய அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும், சாதாரண மற்றும் அக்கறையற்ற முறையில் அல்ல.

106. எனவே, குறுக்கு விசாரணையின் தேவை இல்லாத, நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து ஒரு முகாந்திர வழக்கு மட்டுமே நிறுவப்படவேண்டும் என்ற போதிலும், அவரும் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் எனும் வெறும் நிகழ்தகவின் பேரில் அல்லாமல் ஒரு வலுவான சாட்சியம் தேவைப்படுகிறது என்று நாங்கள் கருதுகிறோம். இங்கு செய்யப்படவேண்டிய சோதனை எப்படி இருக்கவேண்டுமெனில், குற்றம் நிறுவப்படும் நேரத்தில் பயன்படுத்தப்படும் முகாந்திர வழக்கைக் காட்டிலும் அதிகமாகவும், ஆனால் சாட்சியம் எதிர்க்கப்படவில்லையெனில் அது குற்றத்தினை நிரூபிக்கும் எனும் மன நிறைவினை அடைவதற்குச் சற்று குறைவாகவும் இருக்க வேண்டும். அத்தகைய மன நிறைவு இல்லாவிட்டால், குநச-த்தின் பிரிவு 319 -ன் கீழான அதிகாரத்தைப் பயன்படுத்துவதை நீதிமன்றம் தவிர்க்க வேண்டும். குநச-த்தின் பிரிவு 319 ல், "குற்றம் சாட்டப்பட்டவர் அல்லாத ஒருவர் குற்றம் செய்ததாக ஆதாரங்களில் இருந்து வெளிவந்தால்" என்பது கொடுக்கப்பட்டிருப்பதன் நோக்கமானது, "அந்த நபர் குற்றம் சாட்டப்பட்டவருடன் சேர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்படலாம்" என்ற சொற்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள்,

"அத்தகைய நபரைக் குற்றவாளியாகக் கருதலாம்" என்பதல்ல. ஆகையால், குநச-த்தின் பிரிவு 319 -ன் கீழ் செயல்படும் நீதிமன்றத்திற்கு, குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றம் குறித்து எந்தவொரு கருத்தையும் உருவாக்க அதிகாரம் இல்லை." **[சுட்டிக்காட்டுதல் சேர்க்கப்பட்டது]**

10. கு.ந.ச.-தின் பிரிவு 319 விதிகளின்படி, நீதித்துறை அதிகாரத்தையும் அதன் விருப்பத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு, நீதிமன்றங்கள் கடுமையான சோதனைகளைச் செய்ய வேண்டும் எனும் கருத்துரைத்து, **சரப்ஜித் சிங் மற்றும் ஒருவர் எதிர் பஞ்சாப் மாநிலம் மற்றும் ஒருவர்** (2009) 16 எஸ்.சி.சி.46 எனும் வழக்கில், பின்வருமாறு கூறப்பட்டது :-

"21. எனவே, முதல் தகவல் அளிப்பவர் அல்லது சாட்சிகளில் ஒருவர் மற்றவர்களைக் குற்றம் சாட்ட முயல்கிறார் என்பதற்காக மட்டுமே சட்டத்தின் பிரிவு 319 ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்படக்கூடாது. நீதிமன்றம், வகையங்களின் கூறுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் போதுமான மற்றும் உறுதியான காரணங்களைக் குறிப்பிட வேண்டும். வெறுமனே கொள்கைப்பிடிவாதத்துடன் நிரூபிக்கப்படாத அறிக்கை நோக்கத்தைப் பூர்த்தி செய்யாது. அத்தகைய சான்றுகள், குறைந்தபட்சம் சிறப்பு நீதிமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான நோக்கத்திற்காக ஒருவரை நம்பவைக்க வேண்டும். மேற்கூறிய நோக்கத்திற்காக, நீதிமன்றங்கள் கடுமையான சோதனைகளைப் பயன்படுத்த வேண்டும்; சோதனைகளில் ஒன்று, அழைப்பு விடுக்கப்பட வேண்டிய நபர் குற்றவாளி என நிரூபிக்கும் வகையில் பதிவு செய்யப்பட்ட சான்றுகள் உள்ளதா? என்பதாகும்.

22. .....குற்றம் சாட்டப்பட்ட கட்டத்தில் ஒரு குற்றம் பற்றி அறிந்துகொள்ள, முகாந்திர வழக்கு என்ற சோதனை போதுமானதாக இருக்க முடியும் என்றாலும், கடுமையான சந்தேகம் இருப்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும். சட்டப் பிரிவு 227 ன் படி

குற்றச்சாட்டைத் தீர்மானிக்கும் போது, நீதிமன்றம், பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்து, எதிர்க்கப்படாத சாட்சிகள், குற்றவாளி எனும் தீர்ப்புக்கு வழிவகுக்கும் என்ற கருத்தை உருவாக்க வேண்டும்.

23. சட்டப் பிரிவு 319-ன் கீழ் அதிகார வரம்பை கோருவதற்கான நோக்கத்திற்காக உயர்ந்த தரத்தை நிறுவலாமா என்பது கேள்விக்குரியது. இந்த கேள்விகளுக்கான பதில் ஆம் என்பதாக இருக்க வேண்டும். ஒரு நபரை கூடுதல் குற்றம் சாட்டப்பட்டவராக அழைப்பதற்கான ஒரு கருத்தை உருவாக்கும் நோக்கத்திற்காக ஒரு உயர்ந்த தரநிலை நிர்ணயிக்கப்படாவிட்டால், ஏற்கனவே உள்ள கூறுகள் அதாவது, (i) ஒரு சிறப்பு வழக்கு, மற்றும் (ii) அதிகார வரம்பை அரிதாக (அதாவது அரியதாக) பயன்படுத்துவதற்கான ஒரு வழக்கு, திருப்தி அடையாது." **[சுட்டிக்காட்டுதல் சேர்க்கப்பட்டது]**

11. மேற்கண்ட கோட்பாடுகளை இந்த வழக்குக்குப் பொருத்துவதன் மூலம், எங்களது கருத்தின் படி, இதச -வின் பிரிவு 302 ன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்களை அழைத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எந்த ஒரு முகாந்திர வழக்கும் இல்லை.முன்னர் குறிப்பிட்டது போல, இறந்த ஷில்பா தனது மரண வாக்குமூலத்தில், சஞ்சல் என்ற பபிதாவின் பெயரை மட்டுமே குறிப்பிட்டுள்ளார்; ஆனால் மற்றவர்களின் பெயர்களை அவர் குறிப்பிடவில்லை. அடுத்த நாள், அதாவது 20.08.2012 அன்று காவல் துறையில் அவர் அளித்த புகாரில், சுதிர் குமார் குப்தா- அ.ச.-1 கூறியதாவது, சஞ்சல் என்ற பபிதா மற்றும் அனைத்து நபர்களும் தன் மீது மண் எண்ணையை ஊற்றி நெருப்பிட்டதாகத் தனது மகள் ஷில்பா தனக்குச் சொன்னதாகக் கூறியுள்ளார்.அ.ச.-1 முறையீட்டாளர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை அல்லது எந்த வெளிப்படையான செயலையும் அவர்கள் புரிந்ததாகவும் கூறவில்லை. அதேபோல்,அ.ச. 1 மற்றும் அ.ச. 3 ஆகியோர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில், சஞ்சல் என்ற பபிதா மற்றும் பிறரும் இறந்த சில்பாவுக்கு தீ வைத்ததாக ஷில்பா அவர்களிடம் கூறியதாக மட்டுமே

கூறியுள்ளனர். குற்றம் செய்ததில் மேல்முறையீட்டாளர்கள் வகித்த பங்கையும், எந்த குற்றவாளி எந்த குற்றத்தை செய்தார் என்பதையும் புகார் அல்லது சாட்சிகளின் சாட்சியங்கள் குறிக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது இதச -வின் பிரிவு 302 ன் கீழ் தண்டனை விதிக்கப்படும் குற்றத்திற்காக விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு அரசு தரப்பில் முகாந்திர பொருள் இருப்பதாகக் கூற முடியாது.

12.கு.ந.ச -தின் பிரிவு 319-ன் கீழான வகையங்களைப் பயன்படுத்தி, குற்றம் சாட்டப்பட்டவர் விசாரிக்கப்படும் அதே குற்றத்திற்காக மட்டுமல்லாமல் "எந்த குற்றத்திற்காகவும்" ஒரு நபரை குற்றம் சாட்டப்பட்டவராக சேர்க்கலாம்; ஆனால் அந்த குற்றம் அனைத்து குற்றவாளிகளும் ஒன்றாக விசாரிக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். இதச-வின் பிரிவு 498 ஏ மற்றும் வரதட்சணை தடைச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் கீழான குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்களை அழைக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். புகாரிலும், நீதிமன்றத்தில் அளித்த சாட்சியங்களிலும், அ.ச.-1 அளித்த வாக்குமூலம் மிகவும் பொதுவானது, அவர் தனது தகுதிக்கு ஏற்ப ஷில்பாவுக்கு போதுமான வரதட்சணை வழங்கியதாகவும், மணமகன் தரப்பு அந்த வரதட்சணையைக் கொண்டு திருப்தி அடையவில்லை என்றும், அவர்கள் ஒவ்வொரு முறையும் வரதட்சணை கோருவதாகவும் கூறினார். வரதட்சணை கோருதல் மற்றும் வரதட்சணை கொடுமைப்படுத்துதலைப் பொறுத்தவரை, இந்த கோரிக்கையின் நேரம் மற்றும் அதன் தன்மை குறித்து எந்த விவரமும் அளிக்கப்படவில்லை. புகார் மற்றும் சாட்சியங்களில் உள்ள கூற்றுகள் தெளிவற்றவை மற்றும் மேல்முறையீட்டாளர்களில் எவரும் குறிப்பிட்ட கோரிக்கைகள் விடுத்ததாக இல்லை. இத்தகைய சூழ்நிலையில், இதச -தின் பிரிவு 498 ஏ மற்றும் வரதட்சணை தடைச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் கீழ் கூட, மேல்முறையீட்டாளர்களை அழைப்பதற்கு எந்த நியாயமும் இல்லை. விசாரணை முடிந்தவுடன், இதச -தின் பிரிவுகள் 498 ஏ, 304-பி மற்றும் வரதட்சணை தடைச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் கீழ், எந்த குற்றமும்

செய்யப்படவில்லை என்று விசாரணை அதிகாரி கருதினார் என்பதை இங்கு சொல்வது பொருத்தமானதாகும். இதச -வின் பிரிவு 302 ன் கீழ் தண்டிக்கப்படும் குற்றத்திற்காக மட்டுமே சஞ்சல் என்ற பபிதாவின் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. ஹர்தீப் சிங் வழக்கில் அரசமர்வு வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்டுள்ளபடி, குநச-வின் பிரிவு 319-ன் கீழ் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை விடுப்பதற்கு, அவரும் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் எனும் வெறும் நிகழ்தகவின் பேரில் அல்லாமல் ஒரு வலுவான சாட்சியம் தேவைப்படுகிறது, ஆனால் அது தற்போதைய வழக்கில் இல்லை. விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் இந்த விவகாரத்தை நன்கு தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் பரிசீலிக்கவில்லை என்று நாங்கள் கருதுகிறோம்,மேலும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படவேண்டியது.

13. இறுதியாக, உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது மற்றும் இந்த மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன. அமர்வு நீதிபதி/விரைவு நீதிமன்ற எண் 1,மொரதாபாத், சட்டப்படி, அமர்வு விசாரணை எண் 35/2013-வுடன் தொடரலாம். இந்த சங்கதியின் தகுதிகள் குறித்து நாங்கள் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பதை தெளிவு படுத்துகிறோம்.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."